රාජ්‍ය පරිපාලනහා කළමනාකරණ අමාත්‍යාංශය
பொது நிர்வாகமற்றும் முகாமைத்துவஅமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATIONAND MANAGEMENT

ඒකාබද්ධ සේවා අංශය இணைந்தசேவைகள்பிரிவு COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07,இலங்கை. Independence Square,Colombo 07, Sri Lanka

| දුරකතනය | ෆැක්ස් | ඊ-මේල් | වෙබ් අඩවිය |
|---|---|---|---|
| தொலைபேசி:(94) 011- 2694560 | தொலைநகல்:(94) 011- 2692254 | மின்னஞ்சல்:dgcs@pubad.gov.lk | இணைத்தளம்: www.pubad.gov.lk |
| Telephone | Fax | E-mail | Web Site |


| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | ඔබේ අංකය<br>உமதுஇல<br>Your No | දිනය<br>திகதி:<br>Date |
| CS/DOS/24/01/01 | | 2017.06.14 |

அனைத்து அமைச்சு செயலாளர்கள்/
திணைக்களத் தலைவர்கள்/
மாவட்ட செயலாளர்கள்/
பிரதேச செயலாளர்களிற்கு

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனத்தை உறுதிப்படுத்தல்</u>**

இலக்கம் CP/13/0030/523/001 மற்றும் 2013.01.10 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி 2012 ஆம் ஆண்டில் பட்டதாரி பயிலுனர்களாக மாவட்ட மற்றும் பிரதேச நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்திற்கான செயற்திட்டத்தின் கீழ் இணைத்துக்கொள்ளப்பட்ட வேலையற்ற பட்டதாரிகள், ஒரு வருட பயிலுனர் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின், அப் பயிற்சி முடிவுறும் திகதி நியமனத் திகதியாக வலிதாகும் எனக் கருதி நியமனத்தை உறுதி செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஒரு வருட தொடர்ச்சியான பயிற்சி முடிவுறும் திகதியை நியமனத் திகதியாக கருதி செயற்படும் வேளையில், அத் திகதி அரச விடுமுறை தினம் அல்லது வார இறுதி நாளாக இருப்பின் அவர்களின் நியமனத் திகதியை அதனைத் தொடர்ந்து வரும் முதல் வேலை நாளாக கருத்திற்கொண்டு செயற்படுமாறு தாழ்மையுடன் வினவுகிறேன். அதன் அடிப்படையில் உத்தியோகத்தரின் கடமையை பொறுப்பேற்கும் திகதி மற்றும் தகுதிகூர்நிலைக்காலம் முடிவடைந்த பின் நியமனத்தை உறுதிப்படுத்தும் திகதி என்பவற்றை அதற்கேற்றவாறு சீர்திருத்த வேண்டும் எனவும் அறியத் தருகிறேன் .

அதன்படி, தகுதிகூர்நிலைக்காலம் முடிவடைந்தவுடன் எனது சம இலக்கம் மற்றும் 2016.03.31 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டவாறு உத்தியோகத்தர்களின் நியமனத்தை உறுதிப்படுத்தல் தொடர்பான ஆவணங்களை அனுப்புகையில், கடமையை பொறுப்பேற்ற திகதியை மேற்கூறியவாறு சீர்திருத்தி அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்./ கே.வி.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்